RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 203 | ஜூலை.26 2025 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## ‘நாடு போலீஸ் ராஜ்ஜியத்துக்கு செல்கிறதோ?’ சிறுவன் கடத்தல் வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் அச்சம்



சென்னை: ஜூலை.26-

காதல் விவகாரத்தில் சிறுவன் கடத்தப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட பெண்ணின் தந்தை வனராஜ் உள்ளிட்ட 3 பேரின் ஜாமீன் மனுக்களை தள்ளுபடி செய்த சென்னை உயர் நீதிமன்றம், ‘நாடு போலிஸ் ராஜ்ஜியத்துக்கு செல்கிறதோ’ என அச்சம் தெரிவித்துள்ளது.

திருவள்ளூர் மாவட்டம் களாம்பாக்கம் பகுதியைச் சேர்ந்த தனுஷ் என்ற இளைஞர், இன்ஸ்டாகிராம் மூலம் தேனியைச் சேர்ந்த விஜயஸ்ரீ என்ற பெண்ணை காதலித்து பதிவுத் திருமணம் செய்துள்ளார். திருமணத்துக்கு விஜயஸ்ரீ பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்து, பெண்ணை தேடி தனுஷ் வீட்டுக்கு சென்றுள்ளனர். அங்கு அவர் இல்லாததால், தனுஷின் சகோதரரை கடத்திச் சென்று, பின்னர் இரவு பேருந்து நிறுத்தம் ஒன்றில் இறக்கி விட்டுச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக தனுஷின் தாயார் அளித்த புகாரின் அடிப்படையில், புரட்சி பாரதம் கட்சி தலைவரும், கே வி குப்பம் தொகுதி எம்எல்ஏவுமான பூவை ஜெகன்மூர்த்தி உள்ளிட்டோருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்த போலீஸார், பெண்ணின் தந்தை உள்பட 5 பேர் கைது செய்தனர். இந்த வழக்கில் ஜாமீன் வழங்க உத்தரவிடக் கோரி வனராஜ், மணிகண்டன், கணேசன் ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி ஜி.ஜெயச்சந்திரன், வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள முக்கியமானவர்கள் இன்னும் கைது செய்யப்படாததால் மனுதாரர்களுக்கு ஜாமீன் வழங்கினால் விசாரணை பாதிக்கப்படும் என்ற காவல் துறை வாதத்தை ஏற்று, மூவரின் ஜாமீன் மனுக்களையும் தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

‘வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டுள்ள போதும், வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அறிக்கைகளை பார்க்கும்போது விசாரணையில் போதுமான முன்னேற்றம் இல்லை. இதுவரை நடந்த விசாரணை நம்பிக்கை ஏற்படும் வகையில் இல்லை. அரசு இயந்திரம் தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளதற்கு இந்த வழக்கு ஓர் உதாரணம்’ என நீதிபதி உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

‘சாதாரண மக்களின் வாழ்வு, சுதந்திரம் குறித்த கவலையை இந்த வழக்கு ஏற்படுத்தியுள்ளது. இந்த வழக்கை பார்க்கும்போது, நாடு போலீஸ் ராஜ்ஜியத்துக்கு செல்கிறதோ என்று அச்சம் கொள்ள வைக்கிறது” என தெரிவித்த நீதிபதி, இந்த வழக்கில் சந்தேகிக்கப்படும் நபர்களாக மூத்த ஐபிஎஸ் அதிகாரியும், சட்டமன்ற உறுப்பினராகவும், அரசியல் கட்சியின் தலைவராகவும் உள்ள ஒருவரும் உள்ளதால், காவல் துறை அறிக்கையில் கூறியபடி, விசாரணையை முறையாக நடத்தி, காவல் துறை மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை மீட்டெடுக்கப்படும் என நம்புவதாகவும் நீதிபதி உத்தரவில் தெரிவித்துள்ளார்.




■ மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம் தோப்பூர் ஊராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில் திருப்பரங்குன்றம்வட்டாட்சியர் கவிதா, வட்டார வளர்ச்சி அலுவலர் செந்தில் மணி, தோப்பூர் ஊராட்சி செயலாளர்வேல்முருகன், சூரக்குளம்நிலையூர் பிட்2 ஊராட்சி செயலாளர் செல்வம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்



■ மதுரை மாவட்டம் கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம் வெள்ளாங்குளம் ஊராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமினை திமுக தெற்கு மாவட்ட செயலாளர் மணிமாறன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.இந்நிகழ்வில் கள்ளிக்குடி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தங்கவேலு, கண்ணன், கள்ளிக்குடி திமுக ஒன்றிய செயலாளர் மதன்,வெள்ளாங்குளம் ஊராட்சி செயலாளர் திருமூர்த்தி,கன்னிகுடி ஊராட்சி செயலாளர் முத்துப்பாண்டி, ஆவல்சூரன்பட்டி ஊராட்சி செயலாளர் பாலகிருஷ்ணன், மையிட்டான் பட்டி நல்லமநாயக்கன்பட்டி ஊராட்சி செயலாளர் மகேந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## மாநிலங்களவை உறுப்பினராக கமல்ஹாசன் உட்பட தமிழகத்தைச் சேர்ந்த 4 பேர் பதவியேற்பு



புதுடெல்லி: ஜூலை.26-

மாநிலங்களவை உறுப்பினராக மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் உட்பட தமிழகத்தைச் சேர்ந்த 4 பேர் நேற்று (வெள்ளிக்கிழமை) பதவியேற்றனர்.

தமிழகத்தில் இருந்து மாநிலங்களவை எம்.பி.க்களாக இருந்த திமுக வழக்கறிஞர் வில்சன், தொமுச தலைவர் சண்முகம், எம்.எம்.அப்துல்லா மற்றும் திமுக கூட்டணி சார்பில் தேர்வான மதிமுக பொதுச் செயலாளர் வைகோவின் பதவிக் காலமும், அதிமுக ஆதரவுடன் தேர்வான பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் மற்றும் அதிமுகவின் சந்திரசேகர் ஆகிய 6 பேரின் பதவிக் காலம் நேற்றுடன் (ஜூலை 24) நிறைவடைந்தது.

அவர்களுக்குப் பதில் புதிய உறுப்பினர்களாக 6 பேர் ஏற்கனவே போட்டியின்றி தேர்வாகினர். அவர்களில், மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல் ஹாசன், திமுகவைச் சேர்ந்த ராஜாத்தி(கவிஞர் சல்மா), எஸ்.ஆர். சிவலிங்கம், பி.வில்சன் ஆகிய 4 பேர் இன்று மாநிலங்களவை உறுப்பினர்களாக பதவியேற்றனர். இதையடுத்து, அவர்கள் அனைவரும் அவையை நடத்தி வரும் துணைத் தலைவர் ஹரிவன்ஷிடம் வாழ்த்து பெற்றனர்.

“மாநிலங்களவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் கமல்ஹாசன் எனும் நான், சட்டத்தினால் நிறுவப்பட்டதான இந்திய அரசியல் சட்டத்தின் மீது உண்மையான பற்றார்வமும், பற்றுறுதியும் கொண்டிருப்பேன் என்றும் இந்தியாவின் இறையாண்மையையும் ஒருமைப்பாட்டையும் உறுதியாக பற்றி நிற்பேன் என்றும் நான் இப்போது ஏற்க இருக்கும் கடமையினை நேர்மையாக நிறைவேற்றுவேன் என்றும் விழுமிய முறைமையுடன் உறுதிகூறுகிறேன்” என தமிழில் உறுதிமொழி வாசித்து பதவியேற்றுக்கொண்டனர். மற்றவர்களும் பதவியேற்றுக் கொண்டனர்.

இதையடுத்து, கேள்வி நேரம் தொடங்கியது. எனினும், எதிர்க்கட்சி உறுப்பினர்களின் அமளி காரணமாக அவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது. அவை திங்கள்கிழமை காலை 11 மணிக்கு மீண்டும் கூடும். இதேபோல், மக்களவையும் எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

## பிரதமர் மோடி இன்று இரவு வருகை: தூத்துக்குடி விமான நிலையத்தை சுற்றி 5 அடுக்கு பாதுகாப்பு



தூத்துக்குடி: ஜூலை.26-

பிரதமர் மோடி வருகையை முன்னிட்டு தூத்துக்குடிக்கு விமான நிலையத்தை சுற்றி 5 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. தூத்துக்குடியில் விரிவாக்கம் செய்யப்பட்ட விமான நிலையத் திறப்பு விழா மற்றும் தமிழகத்தில் மத்திய அரசு சார்பில் நிறைவேற்றப்பட்ட பல்வேறு திட்டப் பணிகள் தொடக்க விழா தூத்துக்குடி விமான நிலைய வளாகத்தில் இன்று (ஜூலை 26) இரவு 8 மணிக்கு நடைபெறுகிறது.

இதில் பிரதமர் மோடி கலந்து கொண்டு, விரிவாக்கம் செய்யப்பட்ட விமான நிலையத்தை திறந்துவைக்கிறார். மேலும், பல்வேறு திட்டப்பணிகளை திறந்துவைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டிப் பேசுகிறார்.

இந்த விழாவில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி மாலத்தீவில் இருந்து இந்திய விமானப் படைக்குச் சொந்தமான தனி விமானத்தில் இன்று இரவு 7.50 மணியளவில் தூத்துக்குடி விமான நிலையம் வருகிறார். விழா முடிந்து இரவு 9.30 மணியளவில் தனி விமானத்தில் திருச்சி செல்கிறார். இதையொட்டி, தூத்துக்குடி விமான நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு இந்திய விமான படை விமானத்தை தரையிறக்கி சோதனை நடத்தப்பட்டது.

மேலும், பிரதமர் பங்கேற்கும் விழாவை முன்னிட்டு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விமான நிலைய வளாகம் முழுவதும் சிறப்பு பாதுகாப்புப் பிரிவினர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. ஏடிஜிபி டேவிட்சன் தேவாசீர்வாதம் மற்றும் அதிகாரிகள் பாதுகாப்புப் பணிகளை நேற்று ஆய்வு செய்தனர்.

அதேபோல, விழா ஏற்பாடுகளை மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத் மற்றும் விமான நிலைய அதிகாரிகள் பார்வையிட்டனர். இன்று (ஜூலை 25) முதல் 2 ஆயிரம் போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு, 5 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

## தஞ்சை மாவட்டத்தில் குறுவை சாகுபடி இறுதி கட்ட பணிகள் தீவிரம்: 1.38 லட்சம் ஏக்கருக்கு மேல் நடவு



தஞ்சாவூர், ஜூலை.26-

தஞ்சை மாவட்டத்தில் குறுவை சாகுபடி இறுதி கட்ட பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதுவரை 1.38 லட்சம் ஏக்கரை தாண்டி நடவு செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தின் நெற்களஞ்சியமாக ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டம் (தஞ்சை, நாகை, திருவாரூர், மயிலாடுதுறை) விளங்குகிறது.

இந்த மாவட்டங்கள் காவிரி டெல்டா பகுதி என அழைக்கப்படுகிறது. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். இந்த ஆண்டு மேட்டூர் அணை ஜூன் 12ம் தேதி திறக்கப்பட்டது.

இந்த தண்ணீர் கல்லணையை வந்தடைந்ததையடுத்து அங்கிருந்து டெல்டா பாசனத்துக்கு ஜூன் 15ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. கல்லணையில் இருந்து காவிரி, வெண்ணாறு, கல்லணைக்கால்வாய், கொள்ளிடம் ஆகிய ஆறுகளில் தண்ணீர் பிரித்து விடப்பட்டது.

இதன் மூலம் டெல்டா மாவட்டங்களில் குறுவை, சம்பா 13 லட்சம் ஏக்கர் சாகுபடி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. தஞ்சை பகுதிகளில் தற்போது குறுவை சாகுபடி பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகிறது.குறுவை நடவு மற்றும் நேரடி நெல் விதைப்பு பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். தஞ்சை மாவட்டத்தில் இந்த ஆண்டு குறுவை சாகுபடி 1 லட்சத்து 96 ஆயிரம் ஏக்கர் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதற்கு தேவையான விதை நெல், உரம் மற்றும் வேளாண் இடுபொருட்கள் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. அதன்படி தற்போது இறுதி கட்ட நடவுப்பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

தற்போது வரை தஞ்சை மாவட் டத்தில் 1 லட்சத்து 38 ஆயிரம் ஏக்கரை தாண்டி நடவு செய்யப்பட்டுள்ளது. இந்த மாத இறுதிக்குள் குறுவை சாகுபடி நடைபெறும் என்பதால் இலக்கை தாண்டி சாகுபடி பணிகள் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறுவை சாகுபடிக்காக தமிழகம் மட்டுமின்றி வெளிமாநிலங்களில் இருந்து அவ்வப்போது உரங்கள் சரக்கு ரயிலில் வந்து கொண்டிருக்கிறது. யூரியா, டிஏபி, காம்ப்ளக்ஸ், பொட்டாஸ் உரங்கள் சாகுபடிக்கு தேவையான அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. அதேபோல் தனியார் விற்பனை நிலையங்களில் விதை நெல்கள் மற்றும் உரங்கள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகிறதா? எனவும் அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர்.

மேலும் கோடை சாகுபடி அறுவடை பணிகளும் தஞ்சை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இறுதி கட்டத்தை நெருங்கி வருகிறது. விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்கள், தஞ்சை மாவட்டத்தில் உள்ள சேமிப்பு கிடங்கு கொண்டு வரப்பட்டு அங்கிருந்து லாரிகள் மூலம் அரவைக்காக பல்வேறு மாவட்டங்களுக்கு சரக்கு ரயில் மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது.

மேலும் அரவைக்கு பின் நெல்கள் மீண்டும் தஞ்சையில் உள்ள சேமிப்பு இடங்களுக்கு கொண்டு வரப்பட்டு பொது விநியோகத் திட்டத்திற்காக லாரிகள் மூலம் தஞ்சை மாவட்டத்திற்கும், சரக்கு ரயில் மூலம் வெளி மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. இன்னும் சில தினங்களில் கோடை அறுவடை பணிகள் முடிவடைந்து விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### விவசாயிகள் கோரிக்கை

விவசாய பணிக்கு ஆள் பற்றாக்குறையாக உள்ளது.எனவே, நூறு நாள் வேலை திட்டத்தில் உள்ள தொழிலாளர்களை மாவட்ட நிர்வாகம் சார்பில் விவசாய பணிக்கு அனுப்ப வேண்டும்.




தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் நடைபெற்ற பள்ளி புத்தாக்கம் மேம்பாட்டு திட்டத்தில்

## இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பள்ளிகள் பங்கேற்று அறிவியல் கண்டுபிடிப்பில் மாநில அளவில் முதலிடம் மற்றும் மூன்றாம் இடம் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பாராட்டுவிழா நிகழ்ச்சி

இராமநாதபுரம், ஜூலை.26-

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் நடைபெற்ற பள்ளி புத்தாக்கம் மேம் பாட்டு திட்டத்தில் (SIDP 3.0) இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பள்ளிகள் பங்கேற்று அறிவியல் கண்டுபிடிப்பில் மாநில அளவில் முதலிடம் மற்றும் மூன்றாம் இடம் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பாராட்டுவிழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., அவர்களிடம் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகள் காசோலைகள் மற்றும் பாராட்டுச் சான்றுகளை காண்பித்து வாழ்த்து பெற்றார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு தொழில் முனை வோர் மேம்பாட்டு நிறுவனம், பள்ளிக்கல்வித்துறை மற்றும் UNICEF இணைந்து நடத்திய பள்ளி புத்தாக்கம் மேம்பாட்டு திட்டத்தில் (SIDP 3.0) இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து அறிவியல் கண்டுபிடிப்பு போட்டியில் பங்கேற்ற பள்ளிகளில் பரமக்குடி சௌராஸ்டிரா மேல்நிலைப்பள்ளி மாணவர்களின் அறிவியல் கண்டுபிடிப்பு மாநில அளவில் முதலிடம் பெற்றது. அதேபோல் திருவாடானை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவிகளின் அறிவியல் கண்டுபிடிப்பு மூன்றாம் இடம் பெற்றது. முதலிடம் பெற்ற மாணவர்களுக்கு ரூ.1,00,000 ற்கான காசோலை மற்றும் பாராட்டுச் சான்றுகளையும், மூன்றாம் இடம் பெற்ற மாணவிகளுக்கு ரூ.25,000 ற்கான காசோலை மற்றும் பாராட்டுச் சான்றுகளையும் சென்னையில் நடைபெற்ற பாராட்டு விழாவில் மாண்புமிகு சிறு, குறு தொழில்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்களால் வழங்கப்பட்டு பாராட்டியதையொட்டி இரு பள்ளி மாணவ, மாணவிகளை இன்று பள்ளிக்கல்வித்துறையின் சார்பாக வரவேற்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் காசோலை மற்றும் பரிசுகளை காண்பித்து வாழ்த்து பெற்றார்கள்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளை பாராட்டியதுடன் இதே போல் மற்ற பள்ளி மாணவ, மாணவிகள் பங்கேற்று சாதனை படைத்திட வேண்டுமென தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் பள்ளிக்கல்வித்துறை இணை இயக்குநர் குமார், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) திரு.பிரின்ஸ் ஆரோக்கியராஜ் அவர்கள், மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர் திரு.வெள்ளைத்துரை அவர்கள், மாவட்ட கல்வி அலுவலர் திரு.சங்கர் அவர்கள், மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் திரு.விஜய க்குமார் அவர்கள், மாவட்ட திட்ட மேலாளர் திரு.பொன் வேல்முருகன் அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கிராமப்புறங்களில் வீடு கட்ட பிளான் அப்ரூவல் தமிழக அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டும் பெருந்தலைவர் காமராஜர் கழகத் தலைவர் வேண்டுகோள்



தென்காசி, ஜூலை. 26-

தென்காசி மாவட்டத்தில் கிராமப்புற பகுதிகளில் வீடு கட்டுவதற்கு தமிழக அரசு தற்போது கொண்டு வந்துள்ள பிளான் அப்ரூவல்திட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் ஏழை எளிய மக்களை இன்னலில் இருந்து பாதுகாக்க இது குறித்து பொதுமக்களின் கருத்து கேட்டு உள்ளாட்சி அமைப்புகளின் ஆதரவோடு நிபந்தனைகளை தளர்த்தி கிராமப்புறங்களில் வீடுகள் கட்ட புதிய அரசாணை பிறப்பிக்க வேண்டும் என பெருந்தலைவர் காமராஜர் கழக நிறுவன தலைவர் கீழப்பாவூர் அருணாச்சலம் தமிழக அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார் இது குறித்து அவர் கூறியதாவது

மாநகராட்சி நகராட்சிகளில் வீடு கட்ட வரைபட அப்ரூவல் வாங்க வேண்டும் என்று தான் 2021 ஆம் ஆண்டுவரை நடைமுறை இருந்தது தற்போது கிராமத்தில் வீடு கட்டுபவர்கள் ப்ளான் அப்ரூவல் வாங்க எந்த கட்டாயமும் கிடையாது கிராமத்தில் வங்கி கடன் வாங்கி வீடு கட்டுபவர்கள் மட்டுமே ப்ளான் அப்ரூவல் வாங்குவார்கள் அதற்கு சதுர அடிக்கு 5ரூபாய் தான் கட்டணமாக 2021வரை இருந்தது..

இப்பொழுது படிப்படியாக ப்ளான் அப்ரூவல் வாங்க மாற்றம் கொண்டு வந்தனர்

ஒரு வருடம் முன்பு self approval என்று அறிமுகம் செய்து இனி அப்ரூவல் வாங்க எந்த அலுவலகத்திலும் எந்த அலுவலர்களிடம் அப்ரூவல் வாங்க அலைய வேண்டாம் 2500சதுரடி வரை self approval போதும்... அப்ரூவல் தேவையில்லை என்றனர் 2500சதுரடி வரை அப்ரூவல் கட்டணம் கிடையாது என்று யூகித்தோம்..

லே அவுட் மனை ( DTCP) அப்ரூவல் பெற்ற இடங்களில் 2500 சதுரடிக்குள் உள்ள இடத்தின் பரப்பளவு இருக்க வேண்டும்

இரண்டு அடுக்கு 23அடி உயரத்திற்குள் இருக்க வேண்டும்

வீட்டின் அளவு 3500சதுரடி பரப்பளவுக்குள் உள்ள

வீடு கட்ட மட்டுமே self approval திட்டம்

இந்த self approval திட்டத்தில் கட்டணம் ஒரு சதுரடிக்கு 37ரூபாய்

ஊராட்சி அலுவலகம் ஆய்வு கட்டணம் 1500 ரூபாய்

இது மட்டுமல்லாமல் தனியாக இன்ஜினியர் கட்டணம் 5500 ரூபாய் இன்ஜினியரை பொருத்து இந்த கட்டணம் இன்னும் கூடுதலாக கூட கேட்கலாம்

ஆக ஒரு 1000ம் சதுரடியில் வீடு கட்ட குறைந்தபட்சம் 45"ஆயிரம் இந்த self approval திட்டத்தில் செலவை அரசு கட்டாயம் ஆக்கிவிட்டது

இதில் இன்னொரு விசயம் கிராமத்தில் உள்ள மனைகள் பெரும்பாலும் லே அவுட் போட்டு ( DTCP) அப்ரூவல் பெற்ற மனைகளாக இருக்காது... தன் சொந்த பூர்வீக இடத்தில்தான் வீடு கட்டுவார்கள் அந்த பூர்வீக இடம் 2500 சதுரடிக்கு மேல் தான் இருக்கும், அப்படி 2500 சதரடிக்கு மேல் மனையில் வீடு கட்டினால் self approval திட்டம் பொருந்தாது

நீங்கள் கிராமத்தில் வீடு கட்டும் மனை அளவு 2500 சதுரடிக்கு மேல் போனால் ஒரு சதுரடிக்கு 47ரூபாய் இத்தோடு ஊராட்சி ஆய்வு கட்டணம் 1500,

இன்ஜினியர் கட்டணம் 5500 மற்றும் இதர செலவுகளோடு எல்லாம் சேர்த்தால் 1000 சதுரடிக்கு வீடு கட்ட 60 ஆயிரம் ரூபாய் குறைந்தபட்சம் அரசுக்கு கட்ட வேண்டும்... DTCP அப்ரூவல் பெற்ற மனைகளாக இல்லாத நிலையில் அதற்குறிய கட்டணம் கூடுதலாக 20ஆயிரம் வரை ஆகலாம்

இப்ப மாநில அரசு ஊராட்சி அலுவலகத்திற்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையை படிக்கும் போது அதிர்ச்சியாக உள்ளது

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு கிராமங்களில் வீடு கட்ட எந்த அப்ரூவலும் வாங்க வேண்டும் என்று எந்த கட்டாயமும் இல்லை எந்த கட்டணமும் செலுத்த வேண்டும் என்று எந்த கட்டாயமும் இல்லை என்ற நிலைமாறி அப்ரூவல் வாங்க 80ஆயிரம் ரூபாய் இருந்தால் தான் வீடு கட்ட ஆரம்பிக்க முடியும் என்று கிராமத்தில் உள்ள மக்களை கட்டாயம் செய்துவிட்டது இந்த அரசு

இனி அப்ரூவல் கட்டணம் செலுத்தாமல் வீடு கட்டினால்சீல் வைக்கஅனுமதி உள்ளது என்பதை மக்கள் நன்கு உணர வேண்டும்

மாநகராட்சி நகராட்சியில் போல் கிராமத்தில் வீடு கட்டுபவர்களை இப்படி டார்ச்சர் செய்வதன்மூலம் இந்த அரசு கிராமப்புற மக்களிடம் நம்பிக்கை இழக்கிறது

இரயில் கட்டணம் ஒரு பத்து பைசா உயர்ந்தால் எதிர்ப்பு குரல் கொடுக்கும் எந்த தகுதியும் இல்லாத ஆளும் மாநில அரசு உடல் உழைப்பின் மூலம் ஈட்டும் பணத்தை கொண்டு

கிராமத்தில் வீடு கட்டும் ஏழை எளிய மக்களுக்கு மாநில அரசாங்கம் கொடுக்கும் டார்ச்சரை அநியாய கட்டண தொல்லையை எந்த கட்சிகளும் எதிர்த்து கேள்வி கேட்கவில்லையே ஏன்?

மேடைப்பேசுக்கு மட்டும் மக்களுக்கு ஒரு பாதிப்பு என்றால் நாங்கள் முதல் ஆளாக போராடுவோம் என்று எந்த அரசியல் கட்சியும் இதுகுறித்து தமிழக அரசு கண்டனத்தை கூட தெரிவிக்கவில்லை

## நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு



கன்னியாகுமரி, ஜூலை.26-

தமிழ்நாடு முதலமைச்சர் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை கடந்த 15.07.2025 அன்று துவக்கி வைத்ததைத் தொடர்ந்து, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வடசேரி பகுதியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலன் கருதி, அவர்களின் பகுதிகளிலேயே நேரிடையாக சென்று முகாம்கள் நடத்தி கோரிக்கை மனுக்களை பெற, உங்களுடன் ஸ்டாலின் என்ற அற்புதமான திட்டம் அக்டோபர் மாதம் 15ம் தேதி வரை நடத்திட அறிவுறுத்தியுள்ளார்கள்.

அதனடிப்படையில் இன்று அகஸ்தீஸ்வரம் வட்டம் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட 13 வது வார்டுக்கு வடசேரி சோழராஜ கோவில் விவிமி ஆடிட்டோரியத்தில் நடைபெற்ற முகாமினை நேரில் பார்வையிட்டு, முகாம் செயல்பாடுகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் கேட்டறியப்பட்டு, தகுதியானவர்களுக்கு உடனடியாக ஆணை வழங்கிட அறிவுறுத்தப்பட்டது.

மேலும் இம்முகாமில் கலந்து கொண்ட பொதுமக்களின் கோரிக்கையினை கேட்டறியப்பட்டது. பதில் கிடைக்கப் பெறாத பொதுமக்கள் தங்களை நாடி வந்து கேட்கும் போது தகுந்த பதில்களை அவர்களுக்கு வழங்குவதோடு, அவர்களுக்கு தேவையான வழிகாட்டுதல்களை வழங்க வேண்டும் என துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்தார்கள்.



■ மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள், சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியம், அரளிக்கோட்டை ஊராட்சி பகுதியிலுள்ள சமுதாயக்கூடத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில் அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.



## குரோம்பேட்டையில் இலட்சுமி அம்மாள் நினைவு மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் விஜிபியின் 184ஆம் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா

குரோம்பேட்டை, ஜூலை.26-

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டை, திருமதி இலட்சுமி அம்மாள் நினைவு மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் 184ஆம் திருவள்ளுவர் சிலையினை, பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி அவர்கள் முன்னிலையில், விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் டாக்டர் வி.ஜி.சந்தோசம் மற்றும் தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். இவ்விழாவில், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, குரோம்பேட்டை திருக்குறள் பேரவையின் நிறுவனத் தலைவர் தெ.பொ.இளங்கோவன், தலைவர் புலவர் பாண்டியன், தொழிலதிபர் அருள்முருகன், ஏ.இராமமூர்த்தி, மயிலை திருவள்ளுவர் தமிழ்ச் சங்க நிறுவனச் செயலாளர் டாக்டர் சேயோன், குன்றத்தூர் தெய்வத் திருக்குறள் பேரவையின் தலைவர் ம.குப்புசாமி, முனைவர் கோ.பெரியண்ணன் மற்றும் பள்ளி மாணவ மாணவியர்கள் உட்பட பல்வேறு தமிழறிஞர்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.



## காஞ்சி வடக்கு மாவட்ட திமுக மாணவர் அணி சார்பில் ஓரணியில் தமிழ்நாடு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கினார்

தாம்பரம், ஜூலை.26-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட திமுக மாணவர் அணி சார்பில் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் விக்கி என்கின்ற ஏ.விக்னேஸ்வரன் தலைமையில் ஓரணியில் தமிழ்நாடு விழிப்புணர்வை துண்டு பிரசுரங்கள் தாம்பரம் தொகுதியில் அடங்கியுள்ள பாரத் சட்டக் கல்லூரி மற்றும் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, எஸ்.ஐ.வி.இ.டி கல்லூரி மற்றும் பிரின்ஸ் வெங்கடேஸ்வரா கல்லூரிகளில் மாணவ மாணவியர்களுக்கு துண்டுப் பிரசுரங்கள் வழங்கினார்கள் இந்த நிகழ்ச்சியில் மாநகரத் துணைச் செயலாளர் பொன்.சதாசிவம், தாம்பரம் கிழக்கு பகுதி மாணவரணி துணை அமைப்பாளர் ஆர்.தரணிதரன், ஜெ.பிரேம், சீ.பன்னீர்செல்வம், என்.அரவிந்த்ராஜ், கெவின் மேத்யூ, எழிலன், சீனிவாசன், ஜோவின், ஹரி பிரசாத், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## காரைக்குடி அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில், 2025 ஆம் ஆண்டிற்கான நேரடி மாணவர் சேர்க்கை வருகின்ற 31.7.2025 ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது

மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஜூலை.26-

சிவகங்கை மாவட்டம், காரைக்குடியிலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 2025ஆம் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கைக்கான, நேரடி சேர்க்கை வருகின்ற 31.7.2025 ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.

காரைக்குடி அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் ஏற்கனவே உள்ள பொருத்துநர் (Fitter), கடைசலர் (Turner), இயந்திர வேலையாள் (Machinist) போன்ற இரண்டு வருட தொழிற்பிரிவுகளும், பற்றவைப்பவர் (Welder), கணினி இயக்குபவர் (COPA) போன்ற ஓராண்டு தொழிற்பிரிவுகளுடன், நவீன தொழில்நுட்பத்திற்கு ஏற்ப புதிதாக தொடங்கப்பட்டுள்ள (Industry 4.0 TATA Technology) தொழில் 4.0 மைய தொழிற்பிரிவுகளான அடிப்படை வடிவமைப்பாளர் மற்றும் மெய்நிகர் சரிபார்ப்பாளர் (Basic Designer and Virtual Verifier (Mechanical)), மெக்கானிக் எலக்ட்ரிக் வாகனம்(Mechanic Electric Vehicle) போன்ற இரண்டு வருட தொழிற்பிரிவுகளும், தொழில்துறை ரோபாட்டிக்ஸ் மற்றும் டிஜிட்டல் உற்பத்தி தொழில்நுட்ப வல்லுநர் (Industrial Robotics and Digital Manufacturing Technician) ஓராண்டு தொழிற்பிரிவுகளும் உள்ளன. அதில், Welder தொழிற்பிரிவை தவிர மற்ற தொழிற்பிரிவில் சேர மாணவர்கள் கட்டாயம் SSLC (10 ஆம் வகுப்பு) தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் பற்றவைப்பவர் (Welder) தொழிற்பிரிவில் சேர்ந்து கொள்ளலாம்.

மேலும், "தொழிற்பயிற்சி நிலைய சேர்க்கை உதவி மையமான" காரைக்குடி அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு மாணவர்கள் நேரில் வருகைபுரிந்தும் சேர்க்கை மேற்கொள்ளலாம். அவ்வாறு, சேர்க்கைக்கு வரும் பொழுது, மாணவர்கள் தங்களது நிரந்தர தொலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி, மதிப்பெண் சான்றிதழ் (8th/10th), சாதி சான்றிதழ், மாற்று சான்றிதழ், முன்னுரிமை சான்றிதழ் மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஆகியவைகளை உடன் கொண்டு வருதல் வேண்டும்.

அதுமட்டுமன்றி, பயிற்சியின் போது அரசுப் பள்ளியில் படித்த அனைத்து பயிற்சியாளர்களுக்கும், அரசால் வழங்கப்படும் மாதம் ரூ.1,750/ உதவித் தொகை, இலவச பாடப்புத்தகங்கள், மிதிவண்டி, சீருடைகள், காலணிகள், இலவச பஸ்பாஸ் ஆகியவைகளும் பெற்று வழங்கப்படும். மேலும், பயிற்சியின்போது பிரபல தொழில் நிறுவுனங்களில் பயிற்சியும், பயிற்சி காலம் முடிவுற்றவுடன் பிரபல நிறுவனங்களில் ரூ.20,000/ சம்பளத்தில் வேலை வாய்ப்பும் ஏற்பாடு செய்து தரப்படும்.

நேரடி சேர்க்கை தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு 9499055784, 9499055785 ஆகிய அலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு விபரங்கள் பெற்று பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.



## காட்பாடி தேன்பள்ளியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்: அமைச்சர் துரைமுருகன் பங்கேற்பு

வேலூர், ஜூலை.26-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, தேன்பள்ளி ஊராட்சியில் கிருஷ்ணா தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில் அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் கவுண்டர்கள் அமைத்து பொது மக்களின் புகார் மனுக்களை பெற்றனர், புதிய மின்னணு குடும்ப அட்டைக்கு விண்ணப்பித்திருந்த பயனாளிக்கு புதிய மின்னணு குடும்ப அட்டையினை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் வழங்கினர். இந்நிகழ்வின்போது வேலூர் மாவட்ட சுப்புலெட்சுமி, துணை மேயர் சுனில்குமார். வட்டாட்சியர் ஜெகதீசன், ஊராட்சி மன்ற தலைவர்கள் மாலதி ரகு, அனைத்து துறை சார் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டு பொதுமக்களின் புகார் மனுக்களை பதிவேற்றம் செய்தனர்.



■ திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி. அமித் அவர்கள் நேற்று (25.07.2025) மைய அலுவலக கூட்டரங்கில் 1200க்கு மேற்கொண்ட வாக்காளர்களைக் கொண்ட வாக்குச்சாவடிகளை மறு சீரமைத்தல் தொடர்பாக அனைத்து கட்சி பிரதிநிதிகளுடன் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.உடன் துணை ஆணையாளர் ரா.மகேஸ்வரி,உதவி ஆணையாளர்கள் கணேஷ் குமார் (வருவாய்),ராஜசேகர் (மண்டலம்),தேர்தல் துணை வட்டாட்சியர் செ.மேகநாதன்,மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.



# தென்காசி மாவட்டம் குற்றாலம் பேரூராட்சி கலைவாணர் அரங்கத்தில் குற்றாலம் சாரல் திருவிழாவின் 5வது நாள் திருவிழா

## மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது

தென்காசி, ஜூலை.26-

தென்காசி மாவட்டம் குற்றாலம் பேரூராட்சி கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற சாரல் திருவிழாவின் 5 வது நாள் திருவிழாவில் கலந்து கொண்ட கலைஞர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், நினைவுப்பரிசுகளை வழங்கினார்கள்.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது,

ஐந்தாவது நாள் சாரல் திருவிழா நிகழ்ச்சியாக மகளிர் திட்டத்தின் சார்பில் கோலப்போட்டியும், சிவகிரி ஸ்டெல்லா மெட்ரிக் பள்ளி, பூலாங்குளம் அரசு மேல்நிலைப்பள்ளி, இலஞ்சி ஐ.சி.ஐ. தொடக்கப்பள்ளி, மாணவ, மாணவிகளின் பல்சுவை நிகழ்ச்சிகளும், கலை பண்பாட்டுத்துறை மற்றும் தென்னக பண்பாட்டு மையத்தின் சார்பில் பண்பொழி திருமதி. மாரியம்மாள் குழுவினரின் வில்லிசை நிகழ்ச்சியும், சுற்றுலாத்துறையின் சார்பில் சென்னை வேம்பு கலைக்குழுவினரின் பல்சுவை நிகழ்ச்சியும், கலை பண்பாட்டுத்துறையின் சார்பில் சாத்தூர் திருமதி.முத்துமாரி குழுவினரின் கிராமிய கலைநிகழ்ச்சிகளும், கரிவலம்வந்தநல்லூர் விடிவெள்ளி குழுவினரின் மல்லர் கம்பம் நிகழ்ச்சியும், சுற்றுலாத்துறையின் சார்பில் சென்னை ஸ்ரீ யமுனா நாட்டியாஞ்சலியினரின் பரத நாட்டியம் நிகழ்ச்சியும், மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநில கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளும், திருப்பத்தூரான் திரு.சேவியர் கலைக்குழுவினரின் நாட்டுப்புற பல்சுவை நிகழ்ச்சியும், சுற்றுலாத்துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் விஜய் டிவி சூப்பர் சிங்கர் புகழ் செல்வி. டெய்சி, களந்தை ஜெயராம் ஆகியோரின் நெல்லை ஆனந்தராகம் திரைப்பட மெல்லிசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அரவிந்த் அவர்கள் பரிசுகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் திருமதி.ரெஜினி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ஏ.எடிசன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) திரு.ரா.ராமசுப்பிரமணியன் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் காங்கேயம் ஸ்டாலின்" திட்ட முகாமை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்



திருப்பூர், ஜூலை.26-

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.பெலிக்ஸ் ராஜா அவர்கள் தலைமையில் இன்று (25.07.2025) திருப்பூர் மாவட்டம், காங்கேயம் ஊராட்சி ஒன்றியம், கீரனூர் குமரன் மஹாலில் நடைபெற்று வரும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் பொது மக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தினை 15.07.2025 அன்று கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைத்துள்ளார்கள். அதனை தொடர்ந்து, திருப்பூர் மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் 325 முகாம்கள் நடைபெற உள்ளது. குறிப்பாக, முதல் கட்டமாக 120 முகாம்கள் 15.07.2025 முதல் 14.08.2025 வரையிலும் நடைபெற்று வருகிறது. மேலும், இரண்டாம் கட்டமாக 96 முகாம்கள் 15.08.2025 முதல் 14.09.2025 வரையிலும், மூன்றாம் கட்டமாக 96 முகாம்கள் 15.09.2025 முதல் 14.10.2025 வரையிலும் மற்றும் நான்காம் கட்டமாக 13 முகாம்கள் 15.10.2025 முதல் 14.11.2025 வரையிலும் நடைபெறவுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள கடைக்கோடி மக்களுக்கும் அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத்துறையின் சேவைகள், திட்டங்களை அவர்கள் வசிக்கும் பகுதிக்கே சென்று வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்த முகாம்களில் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத்துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 துறைகளைச் சேர்ந்த 46 சேவைகளும் வழங்கப்படும். இம்முகாம்களில் பெறப் படும் விண்ணப்பங்கள் மீது 45 நாட்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திருப்பூர் மாவட்டத்தில் முதல் கட்டமாக 15.07.2025 முதல் 14.08.2025 வரை நடைபெறவுள்ள முகாம்களில் மாநகராட்சியில் 7 முகாம்களும், நகராட்சியில் 20 முகாம்களும், பேரூராட்சிகளில் 7 முகாம்களும், ஊரக பகுதிகளில் 66 கிராம பஞ்சாயத்து மற்றும் 20 பெரி அர்பன் பகுதி என மொத்தம் 120 முகாம்கள் நடைபெறவுள்ளது. இம்முகாம்களானது காலை 9.00 மணிக்கு தொடங்கி மாலை 3.00 மணி வரை நடைபெறவுள்ளது.

அந்த வகையில் இன்றைய தினம், இன்று 25.07.2025 உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 10,11,18 ஆகிய பகுதிகளுக்கு. தேஜஸ் மஹாலிலும், பல்லடம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அனுப் பட்டி, கே.கிருஷ்ணாபுரம் ஊராட்சிகளுக்கு கிருஷ்ணாபுரம் பிரிவு ஸ்ரீபதி மஹாலிலும், மடத்துக் குளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மைவாடி ஊராட்சிக்கு மைவாடி கிரம பஞ்சாயத்து அலுவலகத்திலும், தாராபுரம் ஊராட்சி ஒன்றியத் திற்குட்பட்ட நஞ்சியம்பாளையம், தொப்பம்பட்டி (pup) ஊராட்சிகளுக்கு குப்புச்சிபாளையம், அரசுப்பணியாளர் நகர் விபிஆர்சி எஸ் ஹச் ஜி கட்டடத்திலும், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத் திற்குட்பட்ட வள்ளிபுரம், மேற்குபதி ஊராட்சிகளுக்கு தொரவலூர் அன்னமார் கோவில் திருமண மண்டபத்திலும், காங்கேயம் ஊராட்சிக்குட்பட்ட கீரனூர், மறவபாளையம், ஆலாம்பாடி ஊராட்சிகளுக்கு கீரனூர் குமரன் மஹாலிலும் நடைபெற்று வருகிறது.

மேலும், உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்களில் மகளிர் உரிமைத் தொகைக்கு பொதுமக்கள் நேரடியாக முகாம்களுக்கு சென்று விண்ணப்பங்களை பெற்று, அதே முகாம்களில் குடும்ப அட்டை, ஆதார் அட்டை, வங்கி கணக்கு புத்தகம் உள்ளிட்ட ஆவணங்களுடன் விண்ணப்பித்து பயன்பெறலாம். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பம் "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களில் மட்டுமே வழங்கப்படும். எனவே, திருப்பூர் மாவட்டத்தில் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் நடைபெற வுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தில் உங்கள் பகுதிகளில் ஒதுக்கப்பட்ட நாட்களில் நடைபெறும் முகாம்களில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு தங்கள் மனுக்களை வழங்கி பயன் பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து, திருப்பூர் மாவட்டம், காங்கேயம் ஊராட்சி ஒன்றியம், கீரனூர் குமரன் மஹாலில் நடைபெற்று வரும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமை பார்வையிட்டு ஆய்வு பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு, வேளாண்மைத்துறையின் சார்பில் காய்கறி விதை தொகுப்பு, தோட்டக்கலைத்துறையின் சார்பில் காய்கறி மற்றும் பழச்செடி தொகுப்பு மற்றும் முகாமில் பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடியாக தீர்வு காணப்பட்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில், காங்கேயம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அனுராதா, திரு.ராஜேந்திரன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.



# ஹைட்ரஜனில் இயங்கும் ரயில் எஞ்சின் சோதனை ஓட்டம் வெற்றி: அஸ்வினி வைஷ்ணவ்

சென்னை, ஜூலை.26-

ஹைட்ரஜனில் இயங்கும் ரயில் எஞ்சின் சோதனை ஓட்டம் வெற்றி என ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். 1200 குதிரைத் திறன் கொண்ட ஹைட்ரஜன் ரயிலை இந்தியா உருவாக்கி வருகிறது. சென்னை ஐ.சி.எப். தொழிற்சாலையில் ஹைட்ரஜன் எஞ்சின் சோதனை ஓட்டம் நடைபெற்றது. பழைய ரயில் எஞ்சின்கள் நீக்கப்பட்டு புதிய ஹைட்ரஜன் ரயில் எஞ்சின்கள் பல வழித்தடங்களில் அறிமுகப்படுத்தப்படும்.

# தமிழ்நாடு உரிமைகள் திட்டம் சமூக தரவுகள் கணக்கெடுப்பு பணி மாவட்ட ஆட்சித்தலைவர் செ.சரவணன் தகவல்

திண்டுக்கல், ஜூலை.26-

தமிழ்நாட்டில் மாற்றுத்திறனாளிகளின் மேம்பாட்டிற்காக அரசின் சார்பில் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த நலத்திட்டங்கள் மாற்றுத்திறனாளிகளின் இல்லத்திற்கே சென்று சேரும் வகையில் உலக வங்கி நிதியுதவிடன் தமிழ்நாடு உரிமைகள் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில், திண்டுக்கல் மாவட்டத்தில் இல்லந்தோறும் சென்று அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளையும் கண்டறிந்து அவர்களது முழு விளக்கம் அடங்கிய சமூக தரவு தளத்தை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் நகர்ப்புறம் மற்றும் ஊரகப் பகுதிகளில் முன்களப் பணியாளர்கள் மூலம் வீடு வீடாக சென்று கணக்கெடுப்பு நடத்தி மாற்றுத்திறனாளிகள் குறித்த விவரங்களை சேகரிக்கும் பணி நடைபெறவுள்ளது. கணக்கெடுப்பிற்காக ஏற்கனவே தேர்வு செய்யப்பட்ட சமூக சேவை வழங்கும் நிறுவனங்கள் மூலம் முன்களப் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த கணக்கெடுப்புப் பணி ஜீலை 10ஆம் தேதி துவங்கி வரும் செப்டம்பர் மாத இறுதிக்குள் நடத்தி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் நடத்தப்படும் இக்கணக் கெடுப்பிற்காக தங்கள் வீடுகளுக்கு வரும் முன்களப் பணியாளர்களுக்கு பொதுமக்கள் அனைவரும் தகுந்த ஒத்துழைப்பு அளித்து கணக்கெடுப்புப் பணி சிறப்பாக நடைபெற உதவிட வேண்டும், என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.செ.சரவணன், தெரிவித்துள்ளார்.

# வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் பராமரிப்பு குறித்த மாவட்ட அளவிலான முகாமினை தொடங்கி வைத்து, மொத்தம் ரூ.61.06 இலட்சம் மதிப்பீட்டில் மானிய விலையிலான வேளாண் இயந்திரங்களை 23 விவசாயிகளுக்கு அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் வழங்கினார்



சிவகங்கை, ஜூலை.26-

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள், சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாக சமுதாயக்கூடத்தில் வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் பராமரிப்பு குறித்த மாவட்ட அளவிலான முகாமினை தொடங்கி வைத்து, வேளாண் இயந்திரங்களை விவசாயிகளுக்கு வழங்கி தெரிவிக்கையில்,

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சி காலத்தில் விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில் எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு விவசாயிகளின் நலன் காக்கப்பட்டு வந்தது. அச்சமயம் கடந்த 2006 ஆம் ஆண்டுகளில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் சுமார் ரூ.7,000 கோடி விவசாய கடன் தள்ளுபடி செய்யப்பட்டு, அத்திட்டம் ஒன்றிய அரசிற்கும் மாதிரியாக திகழப்பட்டது குறிப்பிடதக்கதாகும். அவ்வழியில் விவசாய பெருங்குடி மக்களின் நலன் காக்கின்ற வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 2021ல் ஆட்சி பொறுப்பேற்றவுடன் ரூ.12,000 கோடி விவசாய கடன் தள்ளுபடி செய்தார்கள்.

மேலும், விவசாய தொழிலினை மேலை நாடுகளுக்கு இணையான நவீன தொழில்நுட்பங்களுடன் செயல்படுத்துவதற்கு ஏதுவாக விவசாயிகளுக்கான எண்ணற்ற திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்தி விவசாயிகளின் உற்ற தோழனாக திகழ்ந்து வருகிறார்கள்.

இதுபோன்று, வேளாண்மைத்துறை, தோட்டக்கலை (ம) மலைப்பயிர்கள் துறை, வேளாண் பொறியியல் துறை போன்ற துறைகள் வாயிலாகவும் பல்வேறு திட்டங்கள் விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில், தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு பிற மாநிலங்களை ஒப்பிடுகையில், தமிழகம் தன்னிறைவு பெற்ற மாநிலமாக தமிழகம் உருவெடுத்துள்ளது. விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்களை பாதுகாக்கின்ற வகையிலான திட்டங்களை தமிழகம் முழுவதும் செயல்படுத்துவதற்கு ஏதுவாக, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை என அறிவித்து, வேளாண்மை துறைக்கென தனி நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்ததும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு தான் என்பது குறிப்பிடதக்கதாகும்.

மேலும், இன்றையதினம் வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் இயக்கம் மற்றும் பராமரிப்பு முறைகள் குறித்து, விவசாயிகள் அறிந்து கொள்வதற்கு ஏதுவாக, வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் பராமரிப்பு குறித்த மாவட்ட அளவிலான முகாமானது சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இம்முகாமில், தனியார் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் தயாரிப்பு நிறுவனங்களின் பொறியாளர்கள் மற்றும் வேளாண்மை பொறியியல் துறையை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டுள்ளனர். இம்முகாமில், நானும் விவசாயி என்ற முறையில் கலந்து கொண்டதில், பெருமிதம் கொள்கிறேன்.

வேளாண் இயந்திர உரிமையாளர்கள் மற்றும் விவசாயிகள், பொறியாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் இம்முகாமில், காட்சிபடுத்தப்பட்டுள்ள புதிய மற்றும் நவீன வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் அதன் முக்கியத்துவம், பயன்பாடு, பராமரிப்பு குறித்து விளக்கம் அளித்தனர். எனவே, வேளாண் இயந்திர உரிமையாளர்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோர் துறை சார்ந்த அலுவலர்களுடன் நேரில் கலந்துரையாடி தங்களது சந்தேகங்களை தெளிவு செய்து கொள்வதற்கும் இம்முகாம் அடிப்படையாக அமைந்துள்ளது.

விவசாயிகள் இம்முகாமினை பயன்படுத்தி கொண்டு, விவசாயத்திற்கென பயன்படுத்தப்படும் நவீன இயந்திரங்களின் இயக்கம் மற்றும் பராமரிப்பு குறித்து அறிந்து கொண்டு பயன்பெற வேண்டும். அதுமட்டுமன்றி, விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களை விவசாயிகள் முழுமையாக அறிந்து கொண்டு, அத்திட்டத்தின் பயன்களை பெறுவதற்கான துறை சார்ந்த அலுவலர்களை முறையாக அணுகி, விவரங்கள் பெற்று பயன்பெற வேண்டும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தெரிவித்தார்.

மேலும், இம்முகாமில் கூட்டுறவுத்துறையின் சார்பில் வேளாண்மை இயந்திரமயமாக்கல் துணை இயக்க திட்டத்தின் கீழ் கல்லல் வட்டாரத்திற்குட்பட்ட கூத்தலூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் மானாமதுரை வட்டாரத்திற்குட்பட்ட இடைக்காட்டூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் ஆகியவைகளைச் சார்ந்த 5 உறுப்பினர்களுக்கு 70 சதவீதம் மானியத்தில்,

மொத்தம் ரூ.24,05,850/ மதிப்பீட்டிலான டிராக்டர், ரொட்டவேட்டர் மற்றும் 5 வரிசை கொத்து கலப்பை ஆகியவைகளையும், வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் வேளாண்மை இயந்திரமயமாக்கல் துணை இயக்க திட்டத்தின் கீழ் சிவகங்கை, சிங்கம்புணரி, காளையார்கோவில், இளையான்குடி, கல்லல், மானாமதுரை ஆகிய வட்டாரங்களைச் சார்ந்த 18 விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியத்தில் மொத்தம் ரூ.36,99,810/ மதிப்பீட்டிலான வைக்கோல் கட்டும் இயந்திரம், நெல் நடவும் இயந்திரம், பவர் வீடர், பலர் டில்லர் ஆகியவைகளையும் என ஆக மொத்தம் ரூ.61,05,660/ மதிப்பீட்டிலான வேளாண் இயந்திரங்களை விவசாயிகளுக்கு மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இணை இயக்குநர் (வேளாண் மைத்துறை) திரு. சு.சுந்தரமகாலிங்கம், இணைப் பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) திரு.கோ.ராஜேந்திர பிரசாத், செயற்பொறியாளர் (வேளாண்மை பொறியியல் துறை) திரு.சுப்பிரமணியன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி தனலட்சுமி, துணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) திருமதி மு.சத்யா, உதவி செயற்பொறியாளர் (வேளாண்மை பொறியியல் துறை) திரு.செல்வராஜ் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள், விவசாய பெருங்குடி மக்கள் பலர் கலந்து கொண்டனர்.



■ வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, கார்ணாம்பட்டு கிராமத்தில், வேலூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் மத்திய, மாநில அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை கார்ணாம்பட்டு ஊராட்சிக்குட்பட்ட கிராம இல்லத்தரசிகள் மற்றும் பொதுமக்கள் என பலர் பார்வையிட்டனர்.




# மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே தலைமையில் வேளாண்மை அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம்

திருப்பூர், ஜூலை.26-

மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே தலைமையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் வேளாண்மை உழவர்நலத்துறையின் செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள் தொடர்பான துறை சார்ந்த அலுவலர் களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டங்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம் வேளாண்மை மற்றும் அதன் சார்ந்த துறைகளின் முதன்மைத் திட்டங்களுக்கான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட் டத்தில் தோட்டக்கலைத்துறை, வேளாண் பொறியியல் துறை, வேளான் விற்பனை மற்றும் வணிகம், விற்பனைகுழு, விதைச்சான்று துறை மற்றும் பட்டு வளர்ச்சித் துறை ஆகிய துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நடப்பு ஆண்டு 202526 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும் முதன்மைத் திட்டங்களுக்கான பொருள் இலக்கு மற்றும் நிதி இலக்கு சாதனை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில், இணை இயக்குநர் (வேளாண்மை) திரு.சுந்தரவடிவேலு, மாவட்ட ஆட்சியரின் உதவியாளர் (வேளாண்மை) திருமதி ஷீலா பூசலெட்சுமி, துணை இயக்குநர்கள் (வேளாண்மை) பாமாமணி, (தோட்டக்கலைத்துறை) திருமதி சசிகலா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.



# மக்களின் நலனே முதல்வரின் கனவு உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்டம்“ முகாம் ஆய்வினை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் கருத்து

தென்காசி, ஜூலை.26-

தென்காசி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டம், கீழப்பாவூர் பேரூராட்சி, கடையம் ஊராட்சி ஒன்றியம் முதலியார்பட்டி ஆகிய பகுதிகளில் நடைபெற்ற ”உங்களுடன் ஸ்டாலின்” முகாமினை மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் ஆணைக்கிணங்க, ”உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் பல்வேறு இடங்களில் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் செங்கோட்டை வட்டம் வார்டு எண் 1,2,3 ஆகியவற்றிற்கான முகாம் காலாங்கரை யாதவர் சமுதாய நலக்கூடத்திலும், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம் வார்டு எண் 1,7 ஆகியவற்றிற்கான முகாம் கீழப்பாவூர் பேரூராட்சி அலுவலகம் அருகில் உள்ள சமுதாய நலக்கூடத்திலும், வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியம் சங்கனாப்பேரி ஊராட்சிக்கான முகாம் சங்கனாப்பேரி சமுதாய நலக்கூடத்திலும், கடையம் ஊராட்சி ஒன்றியம் முதலியார் பட்டி ஊராட்சிக்கான முகாம் முதலியார்பட்டி சேனைத்தலைவர் திருமண மண்டபத் திலும், மேல நீலிதநல்லூர் ஊராட்சி ஒன்றியம் சேர்ந்தமரம் மஜராவிற்கான முகாம் திருமலாபுரம் ஸ்ரீராம் திருமண மண்டபத்திலும், குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம் செவல்குளம் ஊராட்சிக்கான முகாம் செவல்குளம் அங்காள பரமேஸ்வரி கல்யாண மண்டபத்திலும் நடைபெற்று வருகிறது.

மேலும், 25.07.2025 அன்று புளியங்குடி வட்டம் வார்டு எண் 9,10,11 ஆகியவற்றிற்கான முகாம் இல்லத்து பிள்ளைமார் திருமண மண்டபத்திலும், ஆலங்குளம் வட்டம் வார்டு எண் 8,15 ஆகியவற்றிற்கான முகாம் அண்ணா நகர் மெயின்ரோடு ஆலங்குளம் வார்டு எண் 12 சமுதாய நலக்கூடத்திலும், செங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் தெற்குமேடு ஊராட்சிக்கான முகாம் தெற்கு மேடு தேவர் சமுதாய திருமண மண்டபத்திலும், தென்காசி ஊராட்சி ஒன்றியம் ஆயிரப்பேரி, மத்தளம்பாறை ஊராட்சிகளுக்கான முகாம் ஆயிரப்பேரி சேவை மையத்திலும், சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியம் கீழ வீரசிகாமணி, நொச்சிகுளம் ஆகிய ஊராட்சிகளுக்கான முகாம் கீழவீரசிகாமணி காளியம்மன் கோயில் வளாகத்திலும், கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம் குலையநேரி ஊராட்சிக்கான முகாம் சுப்பையாபுரம் சமுதாயநலக்கூடத்திலும், சுரண்டை வட்டம் வார்டு எண் 6,7 ஆகியவற்றிற்கான முகாம் சிவகுருநாதபுரம் முப்பிடாதியம்மன் கோவில் கலையரங்கத்திலும் நடைபெற்றது. தமிழக முதல்வர் சாதாரண குடிமகனும் எளிய முறையில் அரசு நலத்திட்டங்கள் மற்றும் அரசின் சேவைகளை பெற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு கொண்டுவரப்பட்ட திட்டம் தான் உங்களுடன் ஸ்டாலின் வருங்காலங்களில் அனைத்து தரப்பு மக்களாலும் ஆட்சியின் முக்கிய திட்டமாகவே இது கருதப்படும் தொடர்ந்து மக்களுக்கு செய்யும் பணியே மகேசனுக்கு செய்யும் பணியென தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாரின் செயல்பட்டு வருகின்றார் முதல்வரின் கரங்களுக்கு வலு சேர்ப்போம் எனவே, பொது மக்கள் அனைவரும் இனி வரும் காலங்களிலும் உங்களுடன் ஸ்டாலின் சிறப்புத் தொட்ட முகாம் நடைபெறும் குறிப்பிட்ட நகர வார்டு மற்றும் ஒன்றிய பேரூராட்சி பகுதிகளில் நடைபெறும் முகாமினை பயன்படுத்தி பயன்பெற வேண்டுமென மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல்கிஷோர், தெரிவித்துள்ளார். இந்த ஆய்வின் போது அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

வெளியீடு :
**எழிசன் யேசுராஜ்**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தென்காசி மாவட்டம்.




# வேலூரில், பன்னாட்டு லயன்ஸ் சங்கங்கள் மற்றும் வேலூர் ஸ்மார்ட் சிட்டி லைன் சங்கம் சார்பில் 9ம் ஆண்டு பதவியேற்பு விழா நலதிட்ட விழா

வேலூர், ஜூலை.26-

வேலூர் மாவட்டம், அண்ணா சாலை, ஏலகிரி அரங்கில், பன்னாட்டு லயன்ஸ் சங்கங்கள் மற்றும் வேலூர் ஸ்மார்ட் சிட்டி லைன் சங்கம் சார்பில் 9ம் ஆண்டு பதவியேற்பு விழா மற்றும் நலதிட்ட விழா, தலைவர் லயன்ஸ் ஆல்பியஸ் ஜெயச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. பதவி ஏற்பு விழாவில் எஸ்.சுரேஷ் மற்றும் கே.ஜெயக்குமார் ஆகியோர் புதிய தலைவர் டேனியல் பாலாஜி, செயலாளர் இ.ஹரிஷ், பொருளாளர் பி பவானி ஆகிய நிர்வாகிகள் பதவி ஏற்று சிறப்புரையாற்றினர். எக்ஸ்டென்ஷன் ஷேர் பர்சன் மோனிகா சுரேஷ், கைடிங் லைன் பன்னீர்செல்வம், ஆல்பியஸ் ஜெயச்சந்திரன் ஆகியோர் விழாவை சிறப்பித்தனர். இதனை தொடர்ந்து ஏழை மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை, தினமும் அன்னதானம் எனவும், மருத்துவ முகாம், சிகரம் தொடு நிகழ்ச்சி தெருவோர வியாபாரிகளுக்கு குடை வழங்கி ஆகிய நல திட்ட உதவிகள் தையல் மெஷின், சலவைப் பெட்டி, சேலை, உள்ளிட்ட நல்ல திட்டங்கள் வழங்கி, நிர்வாகிகளை கௌரவித்து பொன்னாடை போர்த்தி விழாவை சிறப்பித்தனர். இவ்விழாவில் சங்க இயக்குனர் சாந்தகுமாரி, சங்க உறுப்பினர்கள் அன்பழகன் சுதா பிரியங்கா, லயன்ஸ் சங்க நிர்வாகிகள், கிரண் அரிசன், ரமேஷ் டான்சி சந்தோஷ் குமார், நோபல் லிவிங்ஸ்டன் மற்றும் பலர் கலந்து கொண்டு இந்த பதவி ஏற்பு விழாவை சிறப்பித்தனர். இறுதியில் மரகன்றுகள் வழங்கி, நன்றியுரையாற்றி பதவி ஏற்பு விழா நிறைவுபெற்றது.



■ மதுரை மாவட்டம் திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் சாத்தங்குடி கிராமத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமில் திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் சந்திரகலா, சாத்தங்குடி ஊராட்சி செயலாளர் சிவனாண்டி, காண்டை ஊராட்சி செயலாளர் காசிமாயன், அம்மாபட்டி ஊராட்சி செயலாளர் சோலைமலை ஊராட்சிகளின் ஒருங்கிணைப்பாளர் செல்வி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை திமுக நகர் தொண்டர் அணி அமைப்பாளராக ராஜேஷ் மற்றும் துணை அமைப்பாளராக க.நவநீதகிருஷ்ணன் நியமனம் செய்ததற்காக தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின், கூட்டுறவுத்துறை அமைச்சர் சிவகங்கை திமுக மாவட்டச் செயலாளர் கேஆர்.பெரியகருப்பன், முன்னாள் அமைச்சரும் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசிரவிக்குமார் திமுக சிவகங்கை மாவட்ட துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் மானாமதுரை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நகர் மன்ற தலைவர் எஸ்.மாரியப்பன்கென்னடி பரிந்துரை செய்த மானாமதுரை நகர் திமுக செயலாளர், க.பொன்னுச்சாமி ஆகியோருக்கு நன்றி இச் செய்தி வாயிலாக நன்றி தெரிவித்துள்ளனர்..



## சிவகங்கை மாவட்ட வேளாண்மை பொறியியல் துறை சார்பில்

# வேளாண் இயந்திரங்கள் பயன்பாடு பராமரிப்பு செயல் விளக்கம் குறித்து மாவட்ட அளவிலான முகாம்

சிவகங்கை, ஜூலை.26-

சிவகங்கை மாவட்ட வேளாண்மை பொறியியல் துறை சார்பில் வேளாண் இயந்திரங்கள் பயன்பாடு பராமரிப்பு செயல் விளக்கம் குறித்து மாவட்ட அளவிலான முகாம் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் பெருந்திட்டவளாக சமுதாய கூடத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது மாவட்ட ஆட்சியர் பொற்கொடி தலைமையில் கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரிய கருப்பன் வேளாண் இயந்திரங்கள் பயன்பாடு மற்றும் பராமரிப்பு முகாமை தொடங்கி வைத்தார். இயந்திரங்கள் மூலம் உளவு செய்முறை நெல் நடவு முறைகளை எடுக்கும் முறை இன்னும் பல வேளாண் கருவிகள் மற்றும் சோலார் இயங்கும் பம்பு செட்டுகளில் பயன்பாடு சூரிய ஒளி உணர்த்தி போன்றவை குறித்து விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. இ வாடகை செயலியின் செயல்பாடு குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. வேளாண்மை இயந்திர மயமாக்கல் துணை இயக்கத் திட்டத்தின் கீழ் 18 விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்களும் இரண்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு வேளாண் இயந்திர வாடகை மையம் அமைக்க டிராக்டர் இணைப்பு கருவிகளுடன் மானியத்தில் வழங்கப்பட்டது. மொத்தம் 60.21 லட்சம் மதிப்புள்ள வேளாண் இயந்திரங்கள் 34.82 லட்சம் மானியத்தில் வழங்கப்பட்டது. விவசாயிகளின் பல்வேறு சந்தேகங்களுக்கு மகேந்திரா, ஸ்வராஜ், ராயல் போர்டு வசந்தம் ட்ரேடர்ஸ், ஸ்ரீ வெங்கடேஸ்வரா எண்டர்பிரைசஸ், ஹரி டிராக்டர்ஸ், குபேடா மற்றும் மதுரை ஜெயராஜ் ஆட்டோமொபைல்ஸ் நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு விளக்கம் அளித்தனர். நிகழ்ச்சியில் வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் தி. சுப்பிரமணியன், உதவி செயற் பொறியாளர் காரைக்குடி வே செல்வராஜ், வேளாண்மை இணை இயக்குனர் சிவகங்கை சோ சுந்தர மகாலிங்கம், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சிவகங்கை கோ. ராஜேந்திர பிரசாத், துணை இயக்குனர் தோட்டக்கலை துறை சிவகங்கை மு சத்யா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# மாநில அளவிலான ‘அறிவியல் திருவிழா’ 19.01.2026 முதல் 25.01.2026 வரை நடைபெற உள்ளது: ‘வாசகத்துடன் இலச்சினை உருவாக்கும் போட்டி’யில் கலந்து கொள்வதற்கான கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் செ.சரவணன் தகவல்

திண்டுக்கல், ஜூலை.26-

அறிவியல் வளர்ச்சியை மக்களிடம் கொண்டு செல்லும் முயற்சியாக திண்டுக்கல் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மாநில அளவிலான ‘அறிவியல் திருவிழா 2026’ திண்டுக்கல் எம்.எஸ்.பி.மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் 19.01.2026 முதல் 25.01.2026 வரை 7 நாட்கள் நடைபெறவுள்ளது.

திண்டுக்கல் மட்டுமல்லாமல் அறிவியல் ஆர்வம் கொண்ட பிற மாவட்ட பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள், தொழில்முனைவோர், வல்லுநர்கள், பொதுமக்கள் என்று பலரும் கலந்து கொள்ளக் கூடிய ஏழு நாள் திருவிழாவாக இது அமையவுள்ளது. இத்திருவிழாவின் கருப்பொருளாக அறிவியல், தொழில்நுட்பம், புத்தொழில், தொழில்முனைவு ஆகியவை உள்ளன. இக்கருப் பொருளினைக் கொண்டு திண்டுக்கல் மாவட்டத்தில் அறிவியல் தொடர்பான விழிப்புணர்வையும், புதிய அறிவியல் அறிஞர்களை வெளிக்கொணரவும், தொழில் வளர்ச்சியையும் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் பொருட்டு, முதற்கட்டமாக பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியருக்கான இலச்சினை வடிவமைப்புடன் வாசகம் எழுதும் போட்டி நடத்திட திட்டமிடப்பட்டது. மேலே குறிப்பிட்டுள்ள கருப்பொருளையும், திண்டுக்கல்லையும் உணர்த்தும் வகையில் வண்ண இலச்சினையையும், அதன் கீழே விழாவிற்கான சாரத்தைச் சொல்லும் வாசகத்தையும் உருவாக்கி போட்டியில் கலந்துகொள்ள மாணவ, மாணவியருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. வடிவமைப்புகளை அனுப்பி வைப்பதற்கான கடைசி தேதி 22.07.2025 என அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது இதற்கான கால அவகாசம் 29.07.2025 வரை நீட்டிக்கப்படுகிறது. மாணவ, மாணவிகளின் வடிவமைப்பினை prof-nagarajansciencefest@gmail.com <mailto:prof-nagarajansciencef-est@gmail.com> என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும். படைப்புகளை svg அல்லது jpg வடிவில் மட்டுமே அனுப்ப வேண்டும். மேலும் விபரங்களுக்கு 7397255808 என்ற எண்ணில் தொடர்புகொண்டு தெரிந்துகொள்ளலாம், என மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன் தெரிவித்துள்ளார்.



■ திருப்பூர் மாநகராட்சி. நான்கு மண்டலங்கள் உள்ளது. இதில் ஒப்பந்த குடிநீர் பணியாளர்கள். பலர் பணிபுரிந்து வருகின்றனர். இதில் மண்டலம் ஒன்று இரண்டு நான்கு ஆகிய குடிநீர் பணியாளர்களுக்கு சம்பளம் வழங்கவில்லை. இதை அறிந்த தொழிற்சங்க சிஐடியு சார்பாக ரங்கராஜன் தலைமையில். மற்றும் சம்பளம் வராத பணியாளர்கள் அனைவரும் திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் அமித் நாரணரே, அவரது அலுவலகத்திற்கு சென்று. குடிநீர் பணியாளர்கள் இன்னும் எங்களுக்கு சம்பளம் வரவில்லை. என்று அவர்கள் கோரிக்கைகளை முன் வைத்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161